# இளைஞர் குரல்

மலர் 1 | 1978 மார்கழி இதழ் | விலை சதம் 60 | இதழ் 4



### உடன் தொடர்பு கொள்க

புயல் நிவாரணம் சம்பந்தமாக உதவ விரும்புபவர்கள் உணவுப் பொருட்களை யும், பாத்திரங்கள், லாந்தர் போன்ற பொருட்களையும், உடைகளையும், நிதி யுதவி செய்யவிரும்புபவர்களையும் தொண் டர்களாகச் சேரவிரும்புபவர்களையும் அவசரமாகத் தமிழ் இளைஞர் பேரவையின் காரியாலயத்தில் தொடர்பு கொள் ளும்படி கேட்கப்படுகிறார்கள்.

தலைமைச் செயலகம்,<br>
தமிழ் இளைஞர் பேரவை,<br>
91 1/1, ஸ்ரான்லி வீதி,<br>
யாழ்ப்பாணம்.

## ஒற்றுமையைக் குலைக்கின்றோம் என்ற பிரசாரத்தை நிறுத்துங்கள்

# தேர்தல் ஒரு சாக்கடை

# எம்மை அதற்குள் இழுக்காதீர்

## தலைவர்களிடம் இளைஞர் வலியுறுத்து!

**ஒற்றுமை என்பது தேர்தல் தொகுதிகளைப் பங்குபோடுவதற் காகவல்ல, அது விடுதலைக்கான போராட்டத்தை நடத்துவதற்காகவே ஏற்பட வேண்டும்.**

தேர்தல் சலனமற்ற ஒரு தூய்மையான இலட் சிய வீரர்களை மட்டுமே கொண்ட ஒரு விடுதலை இயக்கத்தைக் கட்டியெழுப்பவிருக்கிறோம். நாம் உங்களுக்கு மாறானவர்கள் அல்ல. எமக்கு அரசியல் அரிச்சுவடு தொடக்கம் முப்பது ஆண்டுகளாக விடு தலை உணர்வையூட்டிய அரசியல் தலைவர்கள் என்ற வகையில் உங்கள் தலைமையை மதிக்கிறோம். விடு தலைக்கான போராட்டம் ஆரம்பமாகும்போது உங்கள் முன் நாம் நிற்போம். ஆவரங்கால் மாநாட்டுத் தீர்மானத்தை வெற்றியாக்கத் துணை நிற்போம். ஆனால் தேர்தல் என்ற சாக்கடைக்குள் நாம் விழத்தயாரில்லை.

அரை நூற்றாண்டுகால அர சியல் வரலாற்றின் பாடம் எம்மை இத் தீர்மானத்தை எடுக்க வைத்துள்ளது. இலங்கை சுதந்திரம் அடைவ தற்கு முன்னும் பின்னும் பொதுத் தேர்தல்களில் தமிழ் மக்கள் அளித்த தீர்ப்புகளைச் சிங்களத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாகச் சுதந்திரத்திற்குப் பின்னர் முப் பது ஆண்டுகாலமாகத் தென் னிலங்கையின் அரசியல் தலைமை மாறிமாறி ஆட்சியில் அமர்ந்தாலும், தமிழ்ப் பகுதி யின் ஒரே தலைமையில் ஒரே கொள்கையைக் கொண்ட பிர திநிதிகள் பாராளுமன்றத்திற் குத் தெரிவு செய்யப்பட்டனர். இணைந்து வாழுவோம் என்ற இணைப்பாட்சிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. தமிழ் மக்களின் எல்லா ஜனநாயக - நியாயமான கோரிக்கைகளும் சிங்களத் தலைவர்களால் நிரா கரிக்கப்பட்டுவிட்டன.

**பாராளுமன்றம் தமிழ் மக் களுக்கு ஒருபோதும் விடுதலை யைத் தராது!**

பாராளுமன்றம் உலக அரங் கில் குரல் கொடுக்க ஒரு மேடை என்று கூறப்படுகிறது. உண்மை நிலை அவ்வாறில்லை. பாராளுமன்ற உறுப்பினர்க ளின் தவறான போக்குகளாலும் கட்சிமாறல் போன்ற நடவடிக் கைகளாலும் உலக அரங்கில் தவறான பிரசாரமும் இடம் பெறுகிறது.

பாராளுமன்றம் தவிர்ந்த முறையிலும் உலக அரங்கில் பிரசாரம் செய்ய முடியும். இதற்கு இரண்டு உதாரணங் களை மட்டும் கூறுகிறோம். இலங்கையில் இருந்து இங்கி லாந்து சென்ற கிரிக்கட் ஆட் டக்காரர்கள் விளையாடிக் கொண்டிருக்கையில் அவர்க ளின் விளையாட்டை நிறுத்தி

[ 6-ம் பக்கம் பார்க்க ]

## புயல் நிவாரண வேலைகளில் தமிழ் இளைஞர் பேரவை விரைவு நடவடிக்கை

இயற்கையின் பயங்கரத்தால் பெரும் அழிவுக்கு உட்பட்டிருக் கும் மட்டுநகருக்கு நிவாரண வேலைகளில் ஈடுபடும் பொரு ட்டு முதல் பகுதித் தொண் டர்களாக நாற்பது இளைஞர் களை இளைஞர் பேரவை 26-11-78 அன்று அனுப்பி வைத்துள்ளது. இவர்கள் லொறி ஒன்றின் மூலம் திரு கோணமலைக்குச் சென்று அங் கிருந்து கடல் மார்க்கமாக மட்டக்களப்பிற்கு சென்றனர்.

இது இவ்வாறிருக்க யாழ் நகர் இளைஞர் பேரவைக் காரி யாலயத்திற்கு அவசரமாக வரும்படி சகல பொதுச்சபை உறுப்பினர்களையும், தந்தி மூலம் இளைஞர் பேரவைத் தலைமைப்பீடம் அவசரமாக அழைத்துள்ளது. சாதாரண உறுப்பினர்களுக்கும் இவ்வா றான அழைப்பு பத்திரிகைகள் மூலம் விடப்பட்டுள்ளது.

அத்துடன் இளைஞர் பேர வைத் தொண்டர்கள் பலர் மூன்று பிரிவுகளாக பணம், பொருள், உணவு முதலியவற் றைச் சேகரிக்கும் வேலைகளில்

[ 6-ம் பக்கம் பார்க்க ]

### எங்கள் குரல்

## ஆம்! இது போர் முனைதான்

கிழக்கின் அவலக்குரல் காதில் கேட்கிறது. உருக் குலைந்த மட்டுநகர் கண்முன்னே தெரிகிறது. உற்றார் உறவினரை இழந்து உண்ண உணவின்றி ஆடைஇன்றி வீடு இன்றித் தவிக்கும் மக்களின் நிலைபற்றிப் பயங் கர எண்ணம் மனதில் எழுகிறது. செயல் எங்கே? செயல் எங்கே? எனக் கேட்ட இளைஞர்களுக்கு வேக மாக வேலை செய்யச் சந்தர்ப்பம் வந்துவிட்டது. இளை ஞர் பேரவையின் கருத்துப்படி நாம் ஒரு யுத்தமுனை யில் தான் நிற்கின்றோம்.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் தான் தமிழினம் உண்மையில் விடுதலைக்குப் போராடுகின்ற இனமா அல்லது அதற்குத் தகுதியான இனமா என்பதைத் தீர் மானிக்க முடியும். கிழக்கு ஈழத்தின் துன்பத்தை நமது துன்பமாகக் கருதிப் பாதிக்கப்படாத பகுதியில் உள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் இயங்குதல் வேண்டும். குறைந்த பட்சம் ஒவ்வொரு உழைப்பாளியும் ஒருநாள் உழைப்பை அல்லது பத்து ரூபாயை வழங்க முன் வர வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசின் வேலைகள் துரிதம் இல்லை என எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். அத் துடன் அவர் மீண்டும் மட்டுநகர் சென்று அங்கு தங்கி நின்று நிவாரணப்பணிகளில் ஈடுபடவிருப்பதாகப் பத் திரிகைச் செய்தி கூறுகிறது. தலைவரின் இந்த முன் மாதிரியை நாம் பாராட்டுகின்றோம்.

ஏற்கனவே தமிழ் இளைஞர் பேரவைத் தொண்டர் களும் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை சென்று கடல் மார்க்கமாக மட்டுநகர் சென்றுள்ளனர். பணம் சேர்க்கப்பட்டு உணவுப் பொருட்கள் வேண்டியும் நேரடி யாக உடைகள், பொருட்கள் முதலியவற்றைச் சேகரித் தும் உடனுக்குடன் இளைஞர் பேரவையால் மட்டுநக ருக்கு அனுப்பிவைக்கப் படுகின்றன.

கூட்டணியின் சில பா. உ. களும் தொண்டர்களும் கொழும்பில் பணம் பொருள் சேர்த்து அனுப்பப்படு வதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

ஆனால் இயக்கம் இன்னும் கிராமங்கள் தோறும் விஸ்தரிக்கப்பட்டு ஒரு மக்கள் இயக்கமாகப் படவேண் டும். இறுக்கமான அமைப்பை ஏற்படுத்தி விட்டதாகக் கூறும் கூட்டணி தமது கிளைகள் மூலம் உடனடியாக நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

இளைஞர் பேரவை இளைஞர்களும் அமைப்பில் இல் லாத இளைஞர்களும் இன்னும் துரிதமாக விரிவுபடுத்தி இயங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

**பஞ்சமும் நோயும் நின்மெய்யடியார்க்கோ! பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ?**

விடுதலை வீரர்களின் வரிசையில்....

# பண்டிற் ஜவாஹர்லால் நேரு

**இந்திய மக்கள் தலைவர், திரமிக்க தியாகி மகாத்மா காந்தியின் சீடர், மிகச் சிறந்த பிரதமர், உலக அரங்கில் திறமை மிகுந்த அரசியல் வாதி, சுதந்திர வீரருக்கு வழிகாட்டி.**

ஜவஹர்லால் நேருவைப் பற்றிப் பெரும் பாலோர் அறிவர். அறியாத இளைஞரும் உண்டு அறிந்தவருக்கு இச் சமயத்தில் நினைவூட்டவும் அறியாதாரை அறிய வைக்கவும் சுதந்திர தாகம் கொண்டவருக்கு உற்சாக மூட்டவும் இச்சிறு வரலாறு எழுதப்படுகிறது.

செல்வமான குடும்பத்தில் பிறந்து லண்டனிலும் கேம்பிறிச்சிலும் கல்விகற்று இந்தியா திரும்பினர். அவருடைய ஆங்கிலத்தேர்ச்சியை ஆங்கிலேயரே மெச்சினர். அலகாபாத் நகர விஷயங்களில் ஈடுபட்டுக் கொண்டு தனது சட்டத்தரணி தொழிலையும் பார்த்துவரும் போது மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்றது. களத்தில் குதித்தார். காந்தியின் தலைமையை ஏற்ருர். உயிரையும், உடலையும் சுதந்திரப் போராட்டத்துக்கு அர்ப்பணித்தார் இராசபோகம் அனுபவிக்க வேண்டியவர் வாழ்க்கை முறையை மாற்றினர். நகரத்தை விட்டுக் கிராமத்தில் இறங்கினர். கிராமவாசிகளோடு சேர்ந்து இருந்து அவர்களின் போராட்டங்களை அறிந்து உதவி புரிந்தார். அவர்கள் மனதைக் கொள்ளைகொண்டார். இவர் தலைமையில் உத்தரப்பிரதேசத்தில் விவசாயிகள் இயக்கம் நன்கு வளர்ந்து பலப்பட்டது. மக்களின் நம்பிக்கையையும் நன் மதிப்பையும் பெற்ருர்.

ஆங்கிலத்தைப் படித்து அதன் மூலமே சகலதையும் செய்து வந்த நேரு மற்றத் தலைவர்களுடன் சேர்ந்து சுய பாஷையில் செயலாற்றத் தொடங்கினர் இதுவே கிராமவாசிகளைக் கவரும் பணி. காந்தியோடுசேர்ந்து சுதந்திரத்துக்காகப் போராடினாலும் அவருடைய உண்ணாவிரதம் போன்ற தன் உடலை வருத்தும் சாதனைகள் நேருவுக்குப் பிடித்தமில்லை ஆனால் ஏழைகளுடன் இணைந்து சாதாரண வாழ்க்கையையே நடத்தினர். தொடர்ந்து கஷ்டங்களை அனுபவித்தார். சிறையால் விடுதலையான மறுதினம் திரும்பவும் சிறையிலடைபடும் காரணங் கொண்ட செயலில் இறங்குவார்.

ஒரு தடவை சிறை மீண்டதும் பீகாரில் பூகம்பத்தால் சேதம் ஏற்பட்டது அரசுக்குச் சவால்; விட்டுப் பிரசங்கம் செய்து விட்டு ரயில் ஏறிக் கல்கத்தா போய் இரவு பகல் பூகம்பநிவாரண வேலையில் ஈடுபட்டார். 10 நாட்கள் சரியான கஷ்டப்பட்டு சோர்ந்து திரும்பினர் அவர் கோலத்தைப் பார்த்து மக்கள் திகைத்தனர். அடுத்த நாள் மனைவி கமலாவும் நேருவும் தேநீர் அருந்தி முடியும் நேரம் பொலிஸ் அதிகாரி கைது செய்ய வந்துவிட்டார்.

அந்நிய ஆட்சியில் இருந்து நாட்டை விடுவிக்கும் அதே வேளை மக்களை முதலாளித்துவச் சுரண்டலிலிருந்து விடுதலையாக்கும் பணியையும் மேற்கொண்டார்.

தன்னுடைய குடும்பத்தோடு வாழாமல் ஒரே மகளான இந்திராவையும் படிக்கத் தனியே விட்டு விட்டு தேசத் தொண்டிலும் சிறையிலும் வாடினர். இவர் ஒரு தடவை சிறையில் இருக்கும் போது தாயார் பொலிசாரால் தாக்கப்பட்டுக் காயமடைந்தார், இதனல் வெகுவாக வேதனையடைந்தும் போராட்டத்திலிருந்து பின் வாங்கவில்லை. இவர் மனைவியும் சுதேசி இயக்கத்திலும் சட்டமறுப்பிலும் ஈடுபட்டு நோய்வாய்ப்பட்டு இளவயதிலேயே காலமானர். நேரு சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர்.

**சுதந்திர இந்தியாவின் பிரதமரானர்**

1947 ஆகஸ்ட் 15ல் இந்தியா சுதந்திரமடைந்து ஜவாஹர்லால் நேரு பிரதமரானர். ஆறுமாதங்கள் செல்லுமுன் மகாத்மா காந்தி கொலையுண்டார். இந்தச்சம்பவம் நேருவுக்கு பெருந்துயராயும் பிரச்சினையாயுமிருந்தது சோர்ந்தாரா? இல்லை.

பிரெஞ்சு ஆதிகத்திலிருந்த புதுச்சேரியும் போர்த்துக்கேசரிடமிருந்த கோவா ஆகிய பிரதேசங்களும் சுதந்திர இந்தியாவோடு இணைக்கப்பட்டன. பல இன்னல்களையும் சமாளித்து சுபிட்சப் பாதையில் முன்னேறும் போது 1962ல் செஞ்சீன படைபெடுத்தது. சீனப் படைகளைப் பின்வாங்கச் செய்தார் நேரு, பின்பு 1965ல் நேரு மறைந்த புதிதில் பாகிஸ்தான் மேற்கே படையெடுத்தது. அவருக்குப் பின் பிரதமரான லால் பகதூர் சாஸ்திரி வெற்றியீட்டக்கூடிய நிலையில் தேசம் இருந்தது நேருவின் சாதனையே ஆகும்.

# சுதந்திரப் போராட்டமும் தொழில் அதிபர்களும்

இந்திய சுதந்திரப் போராட்டத்துக்குத் தலை சிறந்த தொழிலதிபர் திரு. பர்லா செலுத்திய பங்கை நாமனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும், அவர் கோடீசுவரராய் இருந்தும் மக்கள் போராட்டங்களிலிருந்து ஒதுங்கி நிற்கவில்லை. காங்கிரஸ்வாதியாயிருந்து மகாத்மாகாந்திக்கு உறுதுணையாயிருந்தார். மகாத்மாவின் பாவனைக்கு தன்னுடைய பர்லா மாளிகையையும் கொடுத்திருந்தார், தேவையான போதெல்லாம் இலட்சக்கணக்கில் பொருளுதவி புரிந்து பெரும் தொண்டாற்றினர்,

வியாபார லட்சியம் ஒரு புறமிருக்க, இந்தியாவின் தேவைகளை அயல் நாட்டின் உதவியின்றிக் கூடியவரை சுயமே பூர்த்தி செய்தாக வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் பலதரப்பட்ட ஆலைகளை நிறுவித் திறம்பட நடத்தி வருகின்ருர், அவாது நிறுவனங்களில் அரை லட்சத்துக்கு மேற்பட்டோர் பணிபுரிகிருர்கள்.

அவரை சுதந்திரப் போராட்டத்திலிருந்து பிரித்தெடுத்து தங்கள் கைக்குள் போட்டுக்கொள்வதற்காக பிரிட்டிஷ் ஆட்சியாளர் 'சேர்' பட்டம் வழங்க முன் வந்தார்கள். அவரா ஏற்பார்? மறுத்துவிட்டார். இலங்கையில் ஒரு ஜே. பி. பட்டத்துக்கும் பல வித தோப்புக்கரணம் போட்டு பிரதிஷ்டை போடுபவர் போல் இந்தியாவிலும் அக்காலத்தில் இருந்திருக்கிருர்கள். ஆனல் பர்லா எடுபடவில்லை. இந்தியர் சுதந்திரம் அடைந்தபிறகு 'பத்ம பூஷன்' பட்டத்தைப் பெற்று மகிழ்ந்தார்.

அவர் தேசீயவாதி மாத்திரமல்ல. ஒரு தெய்வ பக்தரும்கூட. சாதாரண பழக்க வழக்கங்களும் நல்ல குணதிசயங்களும் கொண்டவர் திரு. பர்லா.

**திரு. ஜமுனலால் பஜாஜ்**

இவரும் ஒரு வணிக மன்னரும் கோடீஸ்வரருமாவர். ஏழையாகப் பிறந்த இவர் வாலிப வயதில் காந்தியடிகளைச் சந்தித்தார், அவரின் ஆசியைப் பெற்ருர். தனது முயற்சிகளில் வெற்றிபெற்று ஏழைகளைக் கொள்ளையடிக்காமல் செல்வத்தைப் பெருக்கினர். காந்தியின் சுதந்திரப் பணிகளுக்கு செல்வத்தை வாரி வழங்கினர். அது மாத்திரமா? தம்மையே காந்திக்கு அர்ப்பணம் செய்து அவருக்குத் தொண்டு செய்து எளிய வாழ்க்கையை நடத்தினர். இவர் இறந்தபோது எண்ணிறந்த தொழிலாளரும் தேசத் தொண்டர்களும் பிரிவாற்ருமல் தவித்தனர்.

தமிழ் ஈழச் சுதந்திரப் போராட்டத்தில் உங்களுக்கு முக்கிய பங்கு எதிர்பார்த்து நிற்கிறது. மேற்காணும் சுதந்திர வீர வள்ளல்களின் முன்மாதிரியைப் பாருங்கள் நம் ஈழத்திலும் இப்படியான வள்ளல்கள் தோன்றிச் சரித்திரத்தில் இடம்பெறக் கூடாதா?

ஆவரங்கால் மாநாட்டுப் பேருரையில் தலைவர் சிவசிதம்பரம், பா. உ. அவர்கள் சென்ற ஆகஸ்ட் கலவரப் பாதிப்புகளை எடுத்துக் காட்டி,

'தமிழ் மக்கள் எதிர்காலத்தில் முதலீடு செய்வது அத்தனையும் வடக்குக் கிழக்கு மாகாணத்திலாக இருக்கவேண்டும்' என்ருர்.

இந்த வழிகாட்டுதலை ஏற்று தமிழ் ஈழத்தின் பொருளாதார வளரச்சியில் பங்கு கொள்ளுங்கள். விவசாயம் மூலம் ஓரளவு வளர்ந்த பொருளாதாரமே அரசின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையால் பாதிக்கப்படும் இந்த நேரம் தொழிற்சாலைகளைக் கட்டி இளைஞர்கட்குவேலை வாய்ப்பும் அளித்து தன்னிறைவு காணச் செய்யுங்கள். உங்கள் முயற்சியால் நமது பகுதிகளிலே உற்பத்தி செய்கின்ற பொருட்களைப் பாவிக்கின்ற பழக்கத்தை கூடுதலாக நாம் அனுசரிக்க வேண்டும். உள்ளூர் உற்பத்தி கட்டாயம் பொருளாதாரத்தை வளர்க்கும். நமது பொருட்களை நாம் பாவிக்கும் சுதேசி இயக்கம் வளரும் எல்லாத்துக்கும் தெற்கு நோக்கும் அடிமை எண்ணம் அகலும்.

தெற்கே நம் தொழிலதிபர்கள் வணிக மன்னர்கள் அநேகர் இருக்கிருர்கள். உங்களை வடக்கு கிழக்கு வரவேற்கிறது. வாருங்கள் வருமானம் கொஞ்சம் குறைந்தாலும் தன்மானத்துடன் வாழலாம். பொருளையும் ஈட்டி இனத்துக்கு விமோசனமும் தேடலாம்

1977 ஆகஸ்ட் அமளியில் அழிந்ததை இழந்ததை எண்ணிப்பாருங்கள். அத்துடன் முடிந்ததா? இனி வராதா?

நம் தலைவர்களுடனும். விவசாயிகள் தொழிலாளர் இளைஞர்களுடன் ஒன்றிணைந்து சிந்தித்துச் செயலாற்றி சுதந்திரத்தைப் பெற்று தலைநிமிர்ந்து வாழுங்கள்.

— சிவாசி —

## தொழில் அதிபர்களே!
## பணம் படைத்தவர்களே!
## தலை நிமிர்ந்து வாழலாம்!
## வட-கிழக்கிற்கு வாருங்கள்!

## ஒரு நம்பிக்கை

இந்த வரவு செலவுத் திட்ட விவாதம் அரசாங்கத்திற்கும் கூட்டணிக்கும் இடையில் ஒரு சமரசப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கானஒரு சூழ்நிலையை ஏற்படுத்துமென்ற நம்பிக்கையைச் சில சமயங்களில் உருவாக்கியிருக்கிறது,

—கோபு—
3-12-78 ஈழநாடு

## இளைஞர் பேரவையின் முடிவு
## ஒரு ஒளியைத் தருகிறது
## சகோதரி ஒருவர் வரவேற்பு

இளைஞர் பேரவை எடுத்த தீர்க்கமான துணிவான முடிவை நான் மனதார வாழ்த்துகிறேன். பாராளுமன்றத்தையே சுற்றி வந்த எமது தேர்தல் இயக்கமாகிய ஒரு அணியினின்றும் பிரிந்து ஒரு தனித்துவமான இயக்கமாகத் தாங்கள் எடுத்த முடிவு சிறிது காலம் தாழ்ந்ததொன்றெனினும், நல்லதொரு சூழ்நிலையில், தக்க காலகட்டத்தில் எடுக்கப்பட்டதை வரவேற்கிறேன். இது எமது எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு ஒளியைக் கொடுக்கின்றது. எத்தனையோ இடைஞ்சல்கட்கு மத்தியில் எடுத்த இந்தத் தீர்க்கமான முடிவினைச் செயற்படுத்தும் பாரியபொறுப்பு இனித்தங்களையும், தங்களைச் சார்ந்த இயக்கத் தொண்டர்களையும் சார்ந்ததாகும். இதை ஒரு கட்டுக்கோப்பான, கண்ணியமும் கடமை உணர்ச்சியும் கொண்ட, பகைவனும் கண்டு மயங்கும் ஒரு சேனையாக புல்லுருவிகள் ஊடுருவ விடாது, அதனுள் இன்று இருக்கும் புல்லுருவிகளைப் பிடுங்கி எறிய எவ்வித தயக்கமும் காட்டாது விடுதலை ஒன்றை மட்டுமே தாரகமந்திரமாகக்கொண்ட தொண்டர்கள் அடங்கிய ஒரு மக்கள் இயக்கமாகக் கட்டி வளர்க்க வேண்டியது தங்கள் தலையாய கடனாகும். இதற்கு எனது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்க முன் வருகிறேன்.

திருமதி ஊர்மிளா குமாரலிங்கம்,
கொழும்பு.

# தேர்தலும் தமிழீழமும்

- ஒரு பகுப்பாய்வு

தேர்தல் என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஓர் அம்சம் அல்ல. இதுபோராட்டத்தின் போக்கில் தானே வந்து குறுக்கிடும் ஒரு நிகழ்ச்சியாகும். எனவே இதுபோராட்டத்தின் ஓரம்சம் அல்லாத காரணத்தால் போராட்ட சக்திகளின் விருப்பத் தேர்வாகவும் இத்தேர்தல் இருக்கமுடியாது. தமிழீழத்தை ஆக்கிரமித்துள்ள ஏகாதிபத்தியத்தின் திணிப்பே இத்தேர்தல் ஆகும். அதனுல் தமிழீழத்தின் போராட்ட சக்திகள் விரும்பியோ விருப்பாமலோ இத்தேர்தலைச் சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளன. இத்தீவின் இனவாத ஏகாதிபத்திய சக்திகள் இத்தேர்தலை எதற்காக பயன்படுத்துகின்றன? இது ஒரு பிரதான கேள்வி. தேர்தலின் தன்மையை உள்ளவாறு புரிந்துகொள்ளவும், அதை நோக்கி நாம் சரியான நிலைப்பாட்டை எடுக்கவும் இக்கேள்விக்குரிய சரியான பதிலை கண்டுகொள்வது இன்றியமையாதது.

தேர்தல் முறை என்பது அதில் பங்குகொள்வோரின் கருத்தை அறியப் பயன்படுவது. (கருத்தை அறிவது வேறு கருத்துக்கிணங்க நடப்பது என்பது வேறு.) தேர்தலில் பங்குபற்றும் மக்களில் பெரும் பான்மையோரின் கருத்து எதுவோ அதுவே அத்தேர்தலின் பெறுபேருகக் கருதப்படும். இரு நாடுகளைக்கொண்ட இலங்கைத் தீவில் வாழ்கின்ற மக்களின் பெருமட்டான பகுப்பு இரு பிரதான இனங்களைச் சுட்டுவதாகும். இவ்விரு இனங்களும் தத்தம் நாட்டில் பெரும்பான்மை இனமே ஆகும். ஆனுல் ஏகாதிபத்தியத்தின் பலவந்தமான குடியேற்றவாத அடிப்படையிலான இணைப்பு இவ்விரு இனங்களுள் ஒன்றைப் பெருமபான்மையாகவும், மற்றயதைச் சிறுபான்மையாகவும ஆக்கியுள்ளது. பலவந்த இணைப்புக்குள்ளாகியுள்ள இவ்விரு இனங்களின் நிலைமை இவ்வாறிருக்கையில் பெரும்பான்மை இனத்தின் மத்தியில் உள்ள இனவாத ஆக்கிரமிப்புச் சக்திகளின் பிரச்சாரத்தினுல் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தின்மீது தேவையற்ற அச்சமும் பகையுணர்ச்சியும் கொண்டுள்ளது. இந்த உணர்வுகளால் நன்ருகப்பீடிக்கப்பட்டுள்ள பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தின் மொத்தச் சமாதியிலேயே தனது நல்வாழ்வு மலரும் என்று உறுதியாக நம்புகிறது. நிலைமை இவ்வாறு இருக்கையில் பெரும்பான்மையினரின் கருத்தை அறிவதற்காகப் பயன்படுத்தப்படும் தேர்தல் எத்தகைய பெறுபேற்றைத் தரும்? அது நிச்சயமாக பெரும்பான்மை இனத்தின் ஓரினத் தனியாட்சி என்ற பெறுபேற்றையே தருவதாக அமையும். இதனுல் பெரும்பான்மை இன மக்களின் தலைமையை ஏற்றுள்ள எல்லா அரசியற் கட்சிகளும் தவிர்க்கமுடியாதவாறு பேரினவாதத்தை ஏற்ற கட்சிகளாக உள்ளன. இவற்றின் ஆட்சி பெரும்பான்மை இனத்தின் கருத்தை அப்படியே பிரதிபலிக்

இதுமட்டுமன்றி பெரும்பான்மை இனத்துள் நிலவும் வர்க்கங்களின் அதிகாரப் போட்டிக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் பிரதான ஆட்சிமுறையாகவும் தேர்தல் விளங்குகிறது. பெரும்பான்மை இனம் எனப்படும் சிங்கள இனத்துக்குள் நிலப்பிரபுத்துவ வர்க்கம், முதலாளித்துவ வர்க்கம் ஆகியவை பணக்கார வர்க்கங்களாக உள்ளன. இவை தத்தம் நலன்களைக் காத்துக்கொள்வதற்காக அரசயந்திரத்தைக் கைப்பற்றும் பொருட்டு ஒன்ருேடொன்று இடையருத போட்டி நடத்துகின்றன. அரசுஇயந்திரத்தை ஆயுதப்புரட்சியாலும் கைப்பற்றலாம் என்ற போதிலும் இவ்வர்க்கங்களுக்கு இயல்பாகவிள்ள சுயநலமும், சொகுசான வாழ்க்கையும் ஆயுதப்புரட்சியில் ஈடுபடுமளவிற்கு உள்ள உறுதியையும் தியாக உணர்வையும் அளிப்பதில்லை. அன்றியும், இத்தகைய ஒரு புரட்சி நடத்தப்படுமானுல் புரட்சிக்கு எந்நேரமும் தயாரான நிலையிலுள்ள பாட்டாளி வர்க்கம் இப்புரட்சியைப் பயன்படுத்தி அரசயந்திரத்தைக் கைப்பற்றி விடலாம் என்ற அச்சமும் இப்புரட்சியைத் தவிர்க்குமாறு இவ்வர்க்கங்களைத் தூண்டும் ஒரு காரணியாகும். ஆயுதத்தினுல் அரசயந்திரத்தைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக இவ்வர்க்கங்களிடம் அளவுக்குமிஞ்சித் தேங்கிக்கிடக்கும் பணம் அரசுயந்திரத்தைக் கைப்பற்றுவதற்குச் சிறந்த பலமாக உள்ளது. அரசுயந்திரத்தைக் கைப்பற்றுவதில் வெற்றியடையும் வர்க்கம் ஆளும் வர்க்கமாகிறது. அது நிலப்பிரபுத்துவ வர்க்கமாகலாம் அல்லது முதலாளித்துவ வர்க்கமாகலாம். எவ்வர்க்கம் ஆளும்வர்க்கமானுலும் அது தன் வர்க்க நலன்களைத் தன் ஆட்சி அதிகாரத்தினுல் காக்கும் அதே வேளையில் பெரும்பான்மை இனத்தின் இனவாதத்தைப் பிரதிபலிக்கவும் தவறுவதில்லை. சுருங்கச் சொன்னுல் பேரினவாதக் கட்சிகளின் ஆட்சி வர்க்கநலனையும் இன நலனையும் ஒருங்கிணைப்பதால் அது ஒரு பாஸிஸ ஆட்சியாகிறது.

இனிச் சிறுபான்மையினரின் தரப்புக்கு வருவோம்.

சிறுபான்மை இனத்துக்கு இத்தோதலால் என்ன பயன்? ஒரு சில ஆசனங்களுக்கு உரிமை கொண்டாடலாம் என்ற ஆசைக்காக பெரும்பான்மை இனத்தின் ஆட்சிமுறைகளை ஏற்று பெரும்பான்மைச் சர்வாதிகாரத்தை எந்தவகையிலென்ருகிலும் ஒப்புக்கொள்வது தக்கதோ? முறையற்ற ஒப்புநோக்கில் சிறுபான்மை இனம் என்று சொல்லப்படும் தமிழினத்தைப் பொறுத்தவரையில் பேரினச் சர்வாதிகாரத்தைத் திணிக்கும் தேர்தல் முறை அதன் சமூக அரசியல் பொருளாதார விடுதலைக்கும், மேம்பாட்டுக்கும் பெரும் தடைக்கல்லாக உள்ளதன்றி உதவியாக அன்று. இது எவ்வாறென்பதைப் பார்ப்போம். சமூக நிலையைப் பொறுத்தவரை சிங்களப் பெரும்பான்மை இனத்தோடு ஒப்புநோக்கும்போது இவ்வொப்பு நோக்கு முறையற்றதென்ருலும் பலவந்தமான

(4ம் பக்கத் தொடர்ச்சி)

## உங்கள்....

பினர். அதுவுமில்லாமல் அகதிகள் மறுவாழ்வுக்காக கூட்டணியால் நியமிக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களுக்குப் பொறுப்பான குழுவில் இவரும் எல்லையிலுள்ள தொகுதிகளின் பா. உக்களும் உளர். திட்டம் எதுவும் இல்லை என்ருல் அதற்கு இவரும் பொறுப்பே பதவிதுறந்தாலும் கூட்டணியை மீண்டும் தம்மை நியமிக்க வைக்கலாம் என்ற நம்பிக்கையும் இவருக்கு இருக்கலாம். இதற்கு அரசியல் சட்டமும் வழிவகுக்கிறதே. கணேசலிங்கமும் இதைத் தெரிந்து கொண்டு தானே சத்தியப்பிரமாணம் எடுப்பதில் ஸ்ரண்ட் விளையாடுகிருர் தெரியவில்லையா?

த. மகேந்திரன்
உரும்பிராய்

கே: கூட்டணியின் தலைமையை ஏற்றே இளைஞர் பேரவை இயங்கும் எனவும் அதே நேரத்தில் அதற்கு ஒரு தனித்துவம் இருக்கும் எனவும் கூறப்படுகிறது—இதன் அர்த்மென்ன?

ப: பலஸ்தீன இயக்கத்தைப் பற்றி நீர் அறிந்திருக்கின்றீரா? அறியாவிட்டால் சென்ற இளைஞர் குரல் பத்திரிகையைப் பார்க்கவும். பல கருத்துவேறுபாடுகள் கொண்ட இயக்கங்கள் ஓரே தலைமையில் இயங்குவது புரியும்.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணியைத் திட்டித் தீர்த்து ஒற்றுமையைச் சிதைக்கச் செய்யவே பிரதமர் விசேட அனுமதி கொடுத்து யாழ் முற்றவெளியில் இளைஞர் பேரவையின் கூட்டம் நடத்தியதாகவும் முதலில் யாழ் பொலிஸ் அனுமதி மறுத்ததாகவும் ஒரு கூட்டணிப் பா. உ. தெரிவித்துள்ளாரே?

ப; பொறுப்பற்ற முறையில் பேசவும் ஆதாமற்ற முறையில் செய்திகளைக் கூறவும் இப்போ சில பா. உக்கள் பழகிக்கெண்டுவிட்டனர். யூ. என். பி. அரசு பதவி ஏற்றபின்னர் யாழ் முற்றவெளியில் இடதுசாரி ஐக்கிய முன்னணி, பயங்கர இயக்கமாகச் சருதப்பட்ட ரோகன விஜய வீராவின் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் பீங்கிங் கம்யூனிட் கட்சி போன்றவை கூட்டம் வைத்துள்ளன. இவற்றிக்கும் யாழ்ப்பாணத்தில் பொலிசார் அனுமதி மறுத்துப் பின்னர் பிரதமரா வழங்கினுர்? எந்த ஒரு கூட்டத்திற்கும் அனுமதி மறுக்கப்படாதபோதுஇவர் இப்படிக் கூறுவது இளைஞர் பேரவைபற்றி மக்கள் மத்தியில் தவருன அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்காகவேதான். அத்துடன் கூட்டத்தில் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் மிகவும் பொறுப்புடனேயே பேசினர். இடையில் நிற்கும் சில விஷமிகள் இளை பேரவை பற்றித் தவருன தகவல்களை எம்பீக்களுக்குக் கொடுக்கக்கூடும்.

# தேர்தல் நமக்கு ஒரு பலமா?

# மோதல் தரும் ஒரு களமா?

— ஆ. சேயோன் —

கும் ஆட்சியாகவே இருக்கும். எனவே பெரும்பான்மையி
னரின் கருத்தை அறிதல் என்ற தேர்தல் முறை தவிர்க்க
முடியாதபடி பெரும்பான்மை இனத்தின் ஆட்சியையே
கொண்டுவரும். சிறுபான்மையினம் மிகச்சில ஆசனங்களுக்கு
மட்டுமே உரிமை கொண்டாட முடியுமன்றி ஆட்சியமைப்
பது பற்றிக் கனவிலும் நினைக்கமுடியாது! தேர்தல் முறை
அதற்கு இடமளிக்காது இந்தப் பெரும்பான்மை இனம்
பெரும்பான்மையாக இருக்கும்வரை அல்லது சிறுபான்மை
இனம் சிறுபான்மையாக இருக்கும்வரை தேர்தலின் பெறு
பேறு எந்தவகையான மாற்றமுமில்லாமல் பெரும்பான்மை
யினத்தின் ஆட்சி (ஓரினத் தனியாட்சி) என்பதாகவே
இருக்கும். இவ்வாறு ஓரினம் மாற்றமுடியாத பெரும்பான்மை
இனமாக நிலையாக இருக்கையில் தேர்தல் என்ற போலி
நாடகத்தைப் பெரும்பான்மையின ஆட்சி அவ்வப்போது
அரங்கேற்றுவது ஏன்? முதலாளித்துவம் தேர்தலைப் பயன்
படுத்தும் பல நோக்கங்களுள் ஒன்று அது தன் ஜனநாயக
வெளிவேடத்தைக் காட்டி உலகை ஏமாற்றுவதற்கே
தேர்தல் நடத்தப்படுவது ஜனநாயகத்தின் ஓர் 'புனிதமான'
தரிசனமென்றும், அதுவே ஒரு நாடு "ஜனநாயகப்பண்
போடு' இயங்குகின்றதென்பதைக் காட்டுகிறதென்பதும்
பெரும்பணக்காரவர்க்கத்தின் (பூர்ஜுவா வர்க்கத்தின்) வாத
மாகும். இவ்வாதத்தை ஏற்பது முதலாளித்துவத்தின் வர்க்க
இயல்பில் ஒன்ருகும். ஏனெனில் இவ்வாதம் அதன் வர்க்க
நலனுக்கு உகந்ததாக மட்டுமன்றி அதன் ஏகாதிபத்திய பரி
ணமத்துக்கும் தேவையானதுமாகும், சிங்கள முதலாளித்
வம் தமிழீழத்தை ஆக்கிரமிப்பதற்கும், தமிழீழத்தில் குடி
யேற்றம் இராணுவ நடவடிக்கை, பொருளாதாரச் சுரண்
டல் முதலியவற்றை மேற்கொண்டு ஏகாதிபத்திய
மாக வளர்ந்துகொண்டிருப்பதற்கும் காரணம் அது.
முதலாளித்துவ தேர்தல் முறையைப் பயன்படுத்துவதே
ஆகும். இலங்கைத் தீவில் 'ஜனநாய முறைப்படியே' ஆட்சி
நடைபெறுகின்றது என்பதை உலக நாடுகளுக்குக் காட்டி
நற்பெயர் பெற்று அதன் மூலம் அந்நாடுகளின் உதவியைப்
பெறுவதற்கும் உள்ளார்ந்தநிலையில் மாற்தமுடியாத பெரும்
பான்மை இனச் சர்வாதிகாரத்தை நிலைநாட்டி பாஸிஸ
ஏகாதிபத்தியமாக வளர்வதத்கும் தேர்தல் முறை சிங்கள
முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ வர்க்கங்களுக்குப் பேருத
வியாக இருந்து வருகிறது.

இணைப்பு நிலையில் தவிர்க்க இயலாதது) குறிப்பிடத்தக்க நிலப்பிரபுக்களோ, பெரும் பணக்காரரோ, பெருவீதமுதலாளிகளோ இல்லாத ஒரு சமுகத்தை உடையதே தமிழீழம்- சுருங்கச் சொன்னுல் குட்டிப் பூர்ஜுவாக்கள் என்று சொல்லக்கூடிய நடுத்தர வர்க்கத்தினரை மிகப்பெரும்பான்மையாக உடையதே நம்நாடு. இது ஒரு பெருமட்டான கூற்றேயன்றி நுண்ணியபகுப்பாய்வன்று. எனவே ஆழமான வர்க்கவேறுபாடுகள் இல்லாத தமிழீழத்துக்கு ஸ்ரீலங்காவின் வர்க்க அதிகாரப்போட்டிக்குப் பயன்படும் தேர்தல்முறை பயனற்றதாகும். பெருந்தொகையான பணத்தைக்கொட்டி அதிகாரத்துக்காகப் போட்டியிடவேண்டிய கட்டாயதேவை தமிழீழத்தைப் பொறுத்தவரையில் இல்லையென்றே சொல்ல வேண்டும், அவ்வாறு செலவு செய்து இததேர்தலில் வெற்றி பெற்று சில ஆசனங்களைப் பாராளுமன்றத்தில் பெற்றுக் கொண்டாலும் அவற்ருல் கிடைக்கக்கூடிய அதிகாரம் மிக மிகக் குறைவானதேயாகும். இக்குறைந்த அதிகாரத்தைக் கூட தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு சிங்கள அரசு எதத்கு அளிக்குமென்ருல் வர்க்கரீதியிலான பிளவை உண்டாக்குவதற்கே ஆகும். இவ்வாறு சமூகநிலையில் பிளவை ஏற்படுத்துவதுடன் தேர்தல் காலங்களில் சாதி, மதம் முதலியவற்றை அடிப்படையாகவைத்து போட்டிகளை ஏற்படுத்தி தமிழ்ச் சமுகத்தைச் சின்னுபின்னப்படுத்துவதற்கும் தேர்தல் பயன்படுகிறது. இவ்வாறு சமூகநிலையில் உண்டாக்கப்படும் பிளவுகள் விடுதலைக்கான வேலைத்திட்டத்தில் பெரும் பின்னடைவையும், சீர்குலைவுகளையும் ஏற்படுத்துகின்றன.

அரசியல் மிகக்குறுகிய சுயநலத்துக்காகப் பாடுபடும் பிற்போக்குக் கும்பல்கள் தம் எண்ணத்தை நிறைவேற்றுவதற்குத் தேர்தலைப் பயன்படுத்திக்கொள்கின்றன– இக் கும்பல்கள் பெரும் பணக்காரவர்க்கத்தைச் சார்ந்தவைகளாதலால் தம் வர்க்க நலன்களைக் காத்து வளர்ப்பதற்கென தேர்தலில் போட்டியிடவிரும்புகின்றன. தமது குறுகிய பிற்போக்குத்தனமான சந்தர்ப்பவாதத்தை மக்களுக்குத் தெரியாமல் மறைப்பாதற்காக தாமும் தமிழீழ விடுதலைக்குப் போராடுவதாக பெரும் அப்பட்டமான பொய்யை அவிழ்த்து விடுகின்றன. இக்கும்பல்களின் கபடத்தனமான சந்தர்ப்பவாதம் இவை தேர்தல் மையமாக வைத்துத் திரண்டு நிற்பதன் மூலம் வெளிப்படுகிறது. இப் பிற்போக்குச் சந்தர்ப்பவாத

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

★ வண்ணை ஆனந்தன்

# இளைஞர்களின் முதுகில் குத்துகின்றாரா?

தேர்தல் ஆசைகளுக்கு அப்பால், ஒரு சுதந்திர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு இளைஞர்களுக்கு உண்டு என்று கூறியுள்ள வண்ணை ஆனந்தன், பின்னர் ஒருதேர்தல் இயக்கமான கூட்டணியுடன் இணையும்படி வேண்டுகோள் விடுத்துள்ளமை முன்னுக்குப்பின் முரணானது. தேர்தல் ஆசைகளுக்கு அப்பால் ஒரு சுதந்திர இயக்கத்தைக் கட்டியெழுப்பவேண்டியுள்ளதாலேயே தமிழ் இளைஞர் பேரவை த. வி. கூ. தலைமையை ஏற்ற தனித்துவமான அமைப்பாக இயங்குகிறது.

இவ்வாறு அண்மையில் பத்திரிகைகளில் வண்ணை ஆனந்தன் விடுத்த அறிக்கைக்குப் பதில் அறிக்கையொன்றை விடுத்துள்ள இளைஞர் பேரவை நிர்வாகச் செயலாளர், குறிப்பிட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

திரு. வண்ணை ஆனந்தன் 27-11-75 வீரகேசரி பத்திரிகையில் வெளியிட்டுள்ள அறிக்கை எமக்குப் பெரிதும் வியப்பைத் தருகிறது. தமிழ் இளைஞர் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்துள்ள 90% இளைஞர்களுடன் இணையவேண்டுமென கூறுகிறார், தமிழர் விடுதலைக்கூட்டணியில் இருந்து தமிழ் இளைஞர் பேரவை பிரிந்திருந்தால் மட்டுமே சேர்வதைப்பற்றி சிந்திக்க இடமுண்டு. அதே வேளை தமிழ் இளைஞர்பேரவை என்ற அமைப்பை கலைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேரவேண்டுமென அவர் எதிர்பார்த்தால் அது நடைபெறாது என்பதை திடமாக கூறவிரும்புகிறோம். எந்தவொரு நாட்டிலும் அந்நாட்டு இளைஞர்களில் 10% மானவர்கள் போராடமுனைந்தால் அந்நாடு விடுதலை பெறுவது உறுதி ஆகவே அவர் கூறுகின்ற விகிதாசாரங்களைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. தமிழ் இளைஞர் பேரவை வண்ணை ஆனந்தன் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணியை விடுதலைப் பாதையில் தள்ளிச் செல்லும் என்ற உறுதி எமக்குண்டு.

தமிழ் இளைஞர் பேரவையின் பொறுப்புவாய்ந்த பதவிகளை வகித்த வண்ணை ஆனந்தன் இளைஞர் பேரவையில் அமைப்பில்லை என்று கூறுவதை வாதத்துக்கு ஏற்றுக்கொண்டாலும் அதற்கான முக்கிய பொறுப்பை கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில் இவரும் தட்டிக் கழிக்க முடியாது. தமிழ் இளைஞர்பேரவை எடுத்த முடிவுகள் உணர்ச்சி உந்தலால் எடுக்கப்பட்டவை என்று கூறுகின்ற வண்ணை ஆனந்தன் இந்நாட்டு இளைஞர்களிடம் உணர்ச்சியையா? உணர்வையா? வளர்த்துள்ளார் என்பதை திரும்பிப் பார்க்கட்டும்.

தமிழினத்தின் தலைவன் அமிர்தலிங்கம் அவர்கள் தமது தம்பிகளைப் பற்றி நன்கறிவார். கட்டுப்பாடு எது என்பது எமக்கு நன்கு தெரியும். கட்டுப்பாட்டை ஏற்படுத்தவே நாம் சில நடவடிக்கைகள் எடுத்தோம் அதை விடுத்து கட்டுப்பாடு என்று கூறி பேசாமல் இருப்பதன்மூலம் தமிழ் ஈழம் என்ற இலட்சியமும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அழிந்து விட்டதே என்று தலைவர் வந்தபின் கூறவேண்டுமென இவர் காத்திருந்தாரா?

மேலும் அண்ணன் சேனாதிராசா சிறையில் உள்ளபோது திடீரென முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக இவர் கூறுகிறார். இளைஞர் பேரவை எடுத்துள்ள முடிவுகள் அண்ணன் சேனாதிராசாவின் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்ட அமைப்பு விதிகளுக்கும் அவரது கருத்துக்களுக்கும் அமைவானவையே என்று சிறையில் சந்தித்த எமக்கு தெளிவாகக் கூறியுள்ளார்.

### தேர்தல்பற்றி முரண்பாடு

தேர்தல் ஆசைகளுக்கு அப்பால் ஒரு சுதந்திர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு ஒவ்வொரு இளைஞனுக்கும் உண்டு என்று கூறியுள்ள இவர் கூட்டணியுடன் இணையும்படி வேண்டுகோள் விடுத்துள்ளமை முன்னுக்குப்பின் முரணானது என்பதை உணர்த்துகிறது. தேர்தல் ஆசைகளுக்கு அப்பால் ஒரு சுதந்திர இயக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளமையாலேயே தமிழ் இளைஞர் பேரவை த.வி.கூ தலைமையை ஏற்ற தனித்துவமான அமைப்பாக இயங்குகிறது.

அண்ணன் சேனாதிராசா வெளியே இருக்கும்போதே தாம் சிறை சென்றால் இளைஞர் பேரவை செயல் இழந்துவிடக்கூடாது என்ற ஒரே காரணத்துக்காகவே தமது அமைப்புச் செயலாளர் பதவியை துறந்து திரு. த. சந்ததியாரை அமைப்பு செயலாளராகவும் ஒரு வலுவான மத்திய செயற்குழுவையும் உருவாக்கிச் சென்றுள்ளமையை யாவரும் அறிந்ததே.

வண்ணை ஆனந்தன் அவர்கள் பெற்றவளின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ளவில்லை என்று கூறியுள்ளதை வேதனையுடன் நோக்கும் அதே வேளை எத்தனை எத்தனையோ இளைஞர்கள் சிறைக்குவெளியே இருந்தும் பெற்றவர்களை பார்க்முடியாததுள்ளதுடன், மற்றவர்களுக்குக் கூறி வேதனைப் படவும் முடியாதுள்ளதை நினைக்கும்போதே உள்ளம் வெடிக்கின்றது.

வண்ணை ஆனந்தன் அவர்கள் மத்திய செயற்குழு கூட்டங்களிலோ பொதுச்சபைக் கூட்டங்களிலோ கலந்து அவரது கருத்துக்களை கூறாது பத்திரிகையிலும் சந்திகளிலும் நின்று பொதுச்சபையின் ஏகோபித்த முடிவுகளை விமர்ச்சித்தமையாலேயே விளக்கம் கோரப்பட்டு தற்காலிகமாக இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இறுதியாக வண்ணை ஆனந்தன் அவர்களுக்கு ஒரு வார்த்தை உங்களுடைய சில சுய தேவைகளைபூர்த்தி செய்ய குழப்பமான அறிக்கைகளை விட்டு இளைஞர்களை பிரித்து வைக்க முயன்றால் அது பகற்கனவாகவே அமையும்'

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## தேர்தலும் . . .

கும்பல்கள் தம்முள் எவ்வளவு முரண்பாடுகள் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் தமிழீழம் முழுவதையும் ஒற்றுமைப்படுத்திப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தம் பொது எதிரியாகக் கொண்டு தம்முள் ஒற்றுமைப்படுகின்றன. தமிழர்களின் அரசியலில் சீர்குலைவை உண்டாக்க ஸ்ரீ லங்கா இவ்விதத்தில் மட்டும் தேர்தலைப் பயன்படுத்தவில்லை, சிங்கள ஓரினத் தனியாட்சியைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதற்கும், அவ்வாறு தமிழர்கள் ஏற்றுக்கொள்வதை உலகிற்கும் காட்டுவதற்கும். இருநாடுகளின் (தமிழீழம், ஸ்ரீலங்கா) பலவந்த சட்டவிரோத இணைப்பை உறுதிப்படுத்தவும், சிங்களவர் பெரும்பான்மை தமிழர் சிறுபான்மை என்ற உண்மைக்கு மாறான நிலையை உருவாக்கி தமிழர் மீதான சிங்கள இனவாத சர்வாதிகாரத்தை நியாயப்படுத்தவும் தேர்தல் முறையைச் சிங்கள அதிகாரவர்க்கம் பயன்படுத்துகிறது. தமிழர்களின் அரசியல் சீரழிவுக்கு இத் தேர்தல் முறையே முதற் காரணம் என்ற உண்மை இலங்கைத்தீவில் நடைபெற்ற தேர்தல்களில் பகுப்பாய்வு செய்து பார்த்தால் தெளிவாகும்.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் இதனிடத்தில் தேர்தல் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு மிகப் பேரளவானதாகும். பலவந்தமான நாட்டிணைப்பை நியாயப்படுத்தும் தேர்தல்முறையினால் தமிழீழத்தின் பொருளாதாரம் சுயசார்புள்ளதாக இருக்கவேண்டியதன் அவசியத்தைத் தமிழ்மக்கள் உணரத் தவறிவிடுகிறார்கள். ஒரேநாடு என்ற மயக்கத்தினால் தமிழருடைய பொருளுற்பத்தி முயற்சிகள் தமிழீழத்திலுள்ளதைவிட ஸ்ரீலங்காவிலேயே அதிகமாக உள்ளன. இதனால் வர்த்தக நோக்கம் விரிவடைந்து இலாபம் ஈட்டுவதொன்றே குறிக்கோளாவதால் தமிழீழத்தில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களின் முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதேபோல் தமிழீழ விவசாய உற்பத்திகள் சிங்கள நாட்டுச் சந்தையை நோக்கியவைகளாக இருப்பதால் தன்னிறைவுக்கான உற்பத்தி புறக்கணிக்கப்பட்டு வியாபாரரீதியிலான உற்பத்தியே மேலோங்கியுள்ளது.

எனவே ஸ்ரீலங்காவின் தேர்தல்முறை தமிழீழத்தின் சமூக அரசியல் பொருளாதார சக்திகளில் பெரும் சீர்குலைவுகளையும், பெரும் பாதிப்புகளையும் உண்டாக்குவதால் அத்தேர்தல் முறை தேவையானதுதானா என்பதை ஆராயவும் இத்தேர்தல் முறையின் பின்னனியில் உள்ள ஸ்ரீலங்கா ஏகாதிபத்தியதின் ஆக்கிரமிப்புத் தந்திரோபாயங்களை உணர்ந்து கொள்ளவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். இத்தேர்தல் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கான வேலைத்திட்டத்துக்கு அந்நியமான ஒன்று என்பதை நம் ஏத்றுக்கொள்ளும் அதே வேளையில், இத்தேர்தலை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மையமாகவோ அல்லது விடுதலைப் போராட்டத்திற்கான வேலைத்திட்டத்தின் ஓரம்சமாகவோ ஏற்றுக்கொள்ளும் அல்லது கருதும் எவரும் அல்லது எந்தக் குழுவும் உண்மையான விடுதலைவாதிகளாக இருக்கமுடியாத அதேவேளை விடுதலைப்போராட்டத்தைத் திசைதிருப்பும் சந்தர்ப்பவாதிகள் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளத் தவறக்கூடாது.

# உங்கள் கேள்வி...

# எங்கள் பதில்...

க. சிவபாலன்
புத்தூர்

கே: கூட்டணிக்குள் குழப்பம் தீர்ந்துவிட்டது போன்று தெரிகிறதே? ஜே. ஆருக்குப் பட்டைநாமமா?

ப: கூட்டணிக்குள் குழப்பமோ தீர்ந்ததோ என்னவோ – அரசியல் குழப்பம் இருப்பது தெரிகிறது. தமிழர் பிரச்சனை தீர்ந்துவிட்டது என முழங்கினர் டெல்கியில் ஜே. ஆர். ஆனால் இங்கோ பிரதமர் பிரேமதாச உட்பட இன்னும் பல அமைச்சர்கள் இனிப் பிரச்சனைகளைத் தீர்த்துவைப்போம் எனக் கூறியுள்ளனர் டெல்லியில் ஜே.ஆர். த. வி. கூ. பா. உ. க்கள் கட்சி தாவலுக்கு வசதியாக அரசியல் சட்டத்தைத் திருத்தப்போவதாக அறிவித்தார். ஆனால் இங்கோ நீதியமைச்சர் தேவநாயகம் அவ்வாறான திருத்தம் எதுவு செய்யும் உத்தேசம் அரசுக்கு இல்லை என அறிவித்துள்ளார். சோட்டை இராச்சியம் தவிர வேறு எந்த இராச்சியமும் இலங்கையில் இருந்ததில்லை எனத் தொழில் அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இதைக் கேட்டுக் கண்டிச் சிங்களவர்களும் எம்பிக்கள் அமைச்சர்கள் ஆத்திரம் அடைந்துள்ளனராம். ஆனால் அவர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடுகின்றார்களாம். ஏனெனில் கண்டியின் கடைசி மன்னன் ஒரு தமிழன் அல்லவா?

ஆ. இராசேந்திரம்
மாந்தை

கே: இளைஞர் பேரவையிலிருந்து வண்ணையானந்தனை வெளியேற்றியது போல் அமைச்சர்களின் பொதுவரவேற்புகளில் கலந்து கட்டுப்பாடுகளை மீறும் இராசதுரை பா. உ. அவர்களைக் கூட்டணி வெளியேற்றத் துணியுமா?

ப: தந்தை செல்வாவின் காலத்திற்குப்பின்னர் இயக்கத்தில் துணிவான முடிவுகள் எடுக்கப்பட்டு கட்டுப்பாடு காக்கப்படும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் கூட்டணிகட்டுப்பாடுகளைக் காப்பாற்றாது பாராளுமன்ற ஆசனங்களை பங்குபோடும் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்குமானால் உலகின் கேலிக்கு இடமாகும். வடக்கில் ஒரு வண்ணையும் கிழக்கில் ஒரு இராசதுரையையும் பேச்சில் சிறந்தவர்கள். ஆனால் இவ்வாறான பேச்சாளர்களை மட்டும் தமிழினம் பெற்றது தமிழினத்தின் துர் அதிர்ஸ்டமே.

சி. கனகசிங்கம், கழுத்தாவளை

கே: பட்டிருப்பு பா. உ. இளைஞர்களிடம் திட்டம் கேட்டுள்ளாரே?

ப: சிலர் தமிழினத்திற்காகத் தம்மை அர்ப்பணித்ததால் எம்பிக்கள் ஆனார்கள். மாறாத கொள்கை உறுதி கொண்டதால் சிலர் எம்பிக்கள் ஆனார்கள். வேறு சிலர் பெரும் பணம் – நிலம் வைத்திருந்ததால் எம்பிக்கள் ஆனார்கள். இன்னும் சிலர் சந்தர்ப்ப வசத்தால் எங்கெங்கோ நின்று பின்னர் இயக்கத்தின் பலவீனத்தைப் பயன்படுத்தி— விடுதலை இயக்கத்தின் வரலாற்றையே அறியாமல் சண்டித்தனங்களுக்குப் பதில் சண்டித்தனங்கள் செய்து அரசியலுக்கு வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் சந்தியில் நின்று திட்டம் கூற நாம் தயார் இல்லை? அதனால் எவ்வித பலனுமில்லை.

கே: கூட்டணியிடம் எல்லையைக் காக்கத் திட்டம் எதுவுமில்லை என வவுனியா சிவசிதம்பரம் கூறியுள்ளாரே! பதவி துறப்பாரா?

ப: திரு சிவசிதம்பரம் கூட்டணியின் அதி உயர் பீடமான 21 பேர் கொண்ட மத்திய செயற்குழு உறுப்

(8 பக்கம் பார்க்க)

# பிரதமர் விடுவது முதலைக் கண்ணீர் அல்லவா!

# அதை நாம் நம்பலாமா?

தமிழ் ஈழமா? பிரிந்து சென்ற நாடுகளின் கதியைப் பாரீர்''— பிரதமர்-

தமிழ் ஈழம் அமைக்கப் பொருளாதாரம் போதுமா?

தமிழனால் தன்னிறைவு காண முடியுமா?

தென்னிலங்கையில் உத்தியோகம் செய்யாது வாழமுடியுமா? என்பர் சிலர்.

**காரணம்— அரசியல் ஞானமின்மை. கிணற்றுத் தவளைக்கு அது வாழும் கிணற்றின் நீளம், ஆழம் தான் தெரியும்.**

சிங்கப்பூர் யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் சிறியதான ஒரு நாடு. 150 ஆண்டுகட்கு மேலாக அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டிருந்து பின் சுதந்திர மலேசிய சமஷ்டி அரசில் அங்கம் வகித்தது. இதிலும் திருப்தியடையாமல் 1965ல் தனிநாடாகப்பிரிந்தது. அழிந்து விட்டதா? இல்லை. மென்மேலும் சிறப்படைந்து மக்கள் மகிச்சியுடன் வாழ்கின்றனர். துறைமுக வருமானமும் வியாபார வளர்ச்சியுமே காரணம். தமிழ் ஈழத்தில் இது முடியாதா?

பார்படோஸ், மொறீசியஸ் ஆகிய சின்னஞ் சிறு நாடுகள் பிரதானமாகச் சீனி ஏற்றுமதி வருமானத்தைக் கொண்டு சுதந்திரமாயிருந்தால் உள்ள பனைவளத்தையும் சீனித் தொழிற்சாலைகளையும் பயன்படுத்திப் பொருளாதார முன்னேற்றம் காணமுடியுமல்லவா? மாலைதீவு இலங்கைக்கு அண்மையிலுள்ள சிறு தீவுக்கூட்டம். மீன்பிடியும் தென்னையும்தான் பொருளாதாரம். கடலில் அமிழ்ந்துவிட்டதா? இல்லை சுதந்திரமாக நிமிர்ந்து நிற்கிறது. எங்கள் கடல் வளத்தைப் பெருக்க முடியாதா?

சைப்பிரஸ் சிறிய தீவு; பரப்பளவில் பார்த்தால் எங்கள் மட்டுநகர், திருமலை, வவுனியா மாவட்டங்களுக்குச் சரியானது. வயியின், சீமெந்து, கோதுமை, உருளைக்கிழங்கு, ஆகியவற்றின் மூலமாக வரும் வருவாயைக் கொண்டு சுதந்தர நாடாய் விளங்குகிறது. ரொங்கோ, மேற்கு சமோவா ஆகிய சின்னஞ்சிறு தீவுகள் தென்னை, புகையிலை, வாழை வாழை ஆகிய பயிர்களின் வருமானத்தைக் கொண்டு சுதந்திர நாடுகளாகத் திகழும்போது தமிழ் ஈழத்தின் பொருளாதாரம் போதாதாம் சுதந்திரமாக வாழ.

காம்பியா இச்சிறு ஆபிரிக்க நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருள் நிலக்கடலையாகும். துறைமுக வருவாயும் உண்டு. நாம் சுதந்திரமாயிருந்தால் துறைமுக வருவாயும் பெறலாம். நிலக்கடலை உற்பத்தியையும் பெருக்கலாம்.

நெளறு எங்கள் புங்குடுதீவிலும் பார்க்கச் சிறிய தீவு, அந்நாட்டின் பாராளுமன்றம் யாழ் மாநகரசபையிலும் சிறியது. ஏற்றுமதிப் பொருள் பொஸ்பேற் (Phosphote). ஆச்சரியப்படவேண்டாம், இதுகும் ஓர் சுதந்திர நாடு.

லீச் சென்ஸ்ரெயின்: மாட்டுப் பண்ணைகளையும் சிறு கைத்தொழில்களையும் கொண்டு செல்வம் கொழிக்கச் சுதந்திரமாய் இருக்கிறது இந்த 60 மைல் விஸ்தீரணமுள்ள குட்டி நாடு.

முதல் பொருளாதாரமாம் பிறகு சுதந்திரமாம் — சிலர் பிரசாரம் செய்கிறார்கள்.

அரசியல் விடுதலை இல்லாமல் பொருளாதார விடுதலை எப்படி வரும் என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை!

... இஸ்ரேல் நாட்டைப் பற்றித் தெரியாதா? தெரிந்தால் ஏன் ஏமாற்றுவார்த்தைகளில் ஈடுபடுகிறார்கள்?

இஸ்ரேல் பல நூற்றாண்டுகாலம் ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் இன்னும் சில நாடுகளிலும் வெறுப்புக்கும் துன்புறுத்தலுக்கும் அவமானத்துக்கும் ஆளாகினர் யூதமக்கள். ஜெர்மனியிலிருந்து சர்வாதிகாரி ஹிட்லரால் மோசமாக இம்சிக்கப்பட்டனர். இப்படிப் பல விடயங்களாலும் வெளியேறி மனழ குறைந்த பாலைவனங்கொண்ட பாலஸ்தீனத்தில் 60 வருடங்கட்கு முன் குடியேறி இஸ்ரேல் என்னும் சுதந்திரநாட்டை வளம் மிக்க நாடாக்கினர். பாலைவனம் சோலை வனமாகியது யாரும் பொருளாதாரத்தை விருத்தியாக்கிக் கொடுக்கவில்லை. மக்களின் தியாகமும் ஒற்றுமையும் சுதந்திர நிலைமையும் தான் இஸ்ரேலைத் தன்னிறைவு கண்ட பலம் பொருந்திய நாடாக்கியது. புராதனப் பண்பாடு, மொழி புத்துயிர் வென்றன.

மின்சார உற்பத்தி பெருகியது ஏற்றுமதி அதிகரித்துக் கொண்டே வந்தது கோதுமை விளைச்சல் உயர்ந்தது தொழில் நுணுக்கம் அபார முன்னேற்றமடைய பிறநாட்டவர் வந்து பயிற்சி பெற தொடங்கினர். ஜனத்தொகை அதிகரிக்க கட்டாரையாயிருந்த பிரதேசங்கள் நகரங்களாக மாறின வெளி நாடுகளிலிருந்த யூதமக்களும் இஸ்ரேலைத் தம் தாயகமாக நினைத்து உதவினர் தொழில்மயநாடாக மாத்திரமல்ல, பாதுகாப்புத்திறன் கொண்ட நாடாகவுமிருக்கிறது

நிலவளம், நீர்வளம், கடல்வளம், துறைமுக வசதிகள் கொண்ட தமிழ் ஈழம் சுதந்தரமடைந்தால் சாதிக்க முடிந்ததென்ன?

1 - 11 - 78 'இளைஞர் குரல்' 5-ம் பக்கத்தில் சுதந்திரத் தனித்தமிழ் ஈழம் தான் முன்னர் என்பதற்குப்போதிய காரணங் காட்டியுள்ளனர். எவருக்கும் விளங்கும் வண்ணம் உண்மையை உணருங்கள்.

— சிவாசி

## ஆட்டைக் கைவிட்டான் வழிப்போக்கன் நாட்டைக் கைவிடுவானா தமிழன்?

வழிப்போக்கன் ஒருவன் ஆடு ஒன்றைத் தெருவால் கொண்டு சென்றான். இதைக் கண்ட மூன்று போக்கிரிகள் ஆட்டை வழிப்போக்கனிடமிருந்து தந்திரமாய் பறிப்பதற்குத்திட்டம் போட்டார்கள். மூவருமாகச் சற்றுத்தொலைவான தூரங்களில் நின்றுகொண்டார்கள். வழிப்போக்கனைப் பார்த்து முதலாவது போக்கிரி ''ஐயோ! பூதத்தை ஏனையா கட்டிக்கொண்டு போகிறாய் வீட்டிற்கு ஆபத்து'' என்று கூறினான். இரண்டாமவன், ''ஆபத்து! ஆபத்து!! பேயை ஏன் கட்டிஇழுத்துக்கொண்டுபோகிறாய்? நோய் நொடி எல்லாம் வீட்டுக்கு வரும்'' என்றான். இன்னும் கொஞ்சத் தூரம் போனதும் மூன்றாவது போக்கிரி ஒப்பாரிவைத்தான். ''ஐயோ அப்பாவி மனிதா! உன்னோடு வருவது யார் என்று தெரியவில்லையா? அரக்கன் ஒருவன் மாறுவடிவத்தில் வருவது தெரியவில்லையா'' என்றான் மூன்றாமவன்.

திகைத்தான் வழிப்போக்கன். மூன்றுபேரும் ஏதோ விபரீதமாகச் சொல்லுகிறார்கள். ஆட்டைக் கைவிட்டு ஓட்டம் பிடித்தான் வழிப்போக்கன். போக்கிரிகள் ஆட்டைப் பிடித்துப் பங்குபோட்டனர்.

இது பஞ்சதந்திரத்தில்வரும் ஒரு கதை. இவ்வாறுதான் இன்று தமிழ் ஈழத்தைப்பற்றி அரசியல் போக்கிரிகள் சொல்லுகின்ற கூற்றும் இருக்கிறது.

''பொருளாதாரத்தில் நிறைவற்றது தமிழ்ஈழம்'' என்றும் —

''தமிழ் ஈழம் பிரிந்தால் தற்கொலை செய்யும்'' எனவும் - ''மணிஓடர் பொருளாதாரம்'' எனவும் பயமுறுத்தும் போக்கிரிகளை அரசியலில் பார்க்கிறோம்.

ஆனால் தமிழ் ஈழத்தை நோக்கி மீன்பிடிக்கவும், விவசாயம் செய்யவும் திட்டமிட்டு வருகிறார்கள். இது வழிப்போக்கனும் போக்கிரிகளும் போன்ற கதைபோல வில்லையா?

இவற்றிற்கெல்லாம் பதில் அளிக்கும் வகையில் 'சிவாசி' என்பவர் உலகநாடுகளின் உதாரணத்துடன் விளக்கம் தருகிறார். அடுத்த இதழ்களில் சின்னஞ்சிறிய சுதந்திரநாடுகளைப்பற்றி விபரம்தரவிருக்கிறோம்.

— ஆசிரியர்

நாம் கிளியைப்போல் பேசுகிறோம் ஆனால் செயலளவாக்குவதில்லை, சொல்லுதலும் செய்யாதொழிதலும் நமக்கு வழக்கமாகிவிட்டன.
இது உடற்பலயீனம்

போதிய நெடுங்காலம் அழுதாயிற்று, இனியும் அழவேண்டாம். ஆண்மையுடையவர் ஆகுங்கள்.

நோயுற்றிருப்பதாகச் சதா எண்ணுதல் நமது நோயைப் போக்காது. மருந்து அவசியம். பலவீனத்தை நினைவுறுத்தலால் பயன் விளையாது. பலத்தை ஊட்டுங்கள் நமக்கு வேண்டிய ஒரே பொருள் பலமே.

எழுமின்! விழிமின்! குறிசாரும்வரை நில்லாது செல்மின்!

— சுவாமி விவேகானந்தர் —

## ஒற்றுமை

நம்முடைய நாட்டின் முன்னேற்றம் பற்றிய பிரச்சினை எழும் போது நாட்டில் உள்ள எல்லா மதத்தினரும் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும். அவர்கள் இந்துக்களாயினும் சரி, முஸ்லீம்கள் ஆயினும் சரி, கிறீஸ்தவர்களாயினும்சரி, நமக்குள் ஆயிரம் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். 'நாடு' என்னும்போது வேற்றுமைகளை மறந்து ஒன்றுமைப்பட வேண்டும். இந்த யுகத்தில் ஒற்றுமை தான் பெரிய சக்தி. ஒவ்வொருவரின் முன்னேற்றமும் ஒற்றுமையில் தான் தங்கியுள்ளது. ஒற்றுமை இல்லாவிட்டால், அந்நியர் நமக்குள் பிளவு உண்டாக்குவார்கள் அதன் விளைவு பயங்கரமாய் இருக்கும். ஆகையால் ஒன்றுமையை முன்னிட்டே தேச சேவை செய்ய வேண்டும்.

— மதன் மோஹன் மாளவியா —

## பிரம்மச்சரியம்

உடலில் வலிமை இல்லாமல் எந்தச் செய்கையும் நடைபெறமுடியாது. உடல் ஆரோக்கியமாக இருக்கத்தக்க செய்கைகளே நாம் செய்ய வேண்டும். ஆகையால் ஆங்காங்கு உடல் பயிற்சி நிலையங்களைத் திறக்க வேண்டும். ஒவ்வொருவரும் அங்கு சென்று பயிற்சி செய்ய வேண்டும். குஸ்திகற்க வேண்டும். அதனால் உடல் உறுதியாகஇருக்கும், துவங்கும் வேலைகள் எல்லாம் வெற்றி பெறும். பிரம்மசரியத்தைப் பேணவேண்டும். உடலை ஓம்புவது அதுவே குஸ்தியும் உடற்பயிற்சியும் அதறகுத் துணை செய்வனவே. பிரம்ம சரியம்தவறாது ஒழுகினால் நன்மைகள் யாவும் தாமே சிட்டும்.

— மதன் மோஹன் மாளவியா

## தேச சேவை

தாய் மொழிக்குப் பணி செய்வது ஒரு நல்ல நாட்டுப் பணி என்பது உண்மை. ஆனால் நாட்டுப்பற்று உலகப் போருக்குக் காரணம் ஆவது போல் மொழிப்பற்று பல இடங்களில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. இது துன்பம் தரும் உண்மை. மொழிப்பற்று மொழி வெறி ஆகிவிடக்கூடாது. என் மொழி சிறந்ததுஎன்பது தவறானமனப் பான்மை அல்ல. பிற மொழிகள் தாழ்ந்தவை என்று கருதுவது மிகவும் தவறான மனப் பான்மை. சிங்களத்திற்குச் சிங்களவர் சேவை செய்வது தேச பக்தியே ஆகும். தமிழுக்குத் தமிழர்க்ள் பணிபுரிவதும் தேச சேவையே ஆகும்.

— யாரோ —

## மக்களில் பதர்

தனக்கோமற்றவர்களுக்கோ ஒரு பயனும்இல்லாதபேச்சைச் பேசிக்கொண்டிருப்பவனை அறிவுடைய மகன் என்று கூறாதீர்கள். மக்கள்இனத்தில் காணும் பதர் என்று குறிப்பிடுங்கள்.

## துரோகிகள்

வாளைப் போன்று வெளிப்படை யாகவே நிற்கும் பகைவர்களைக் கண்டு அஞ்ச வேண்டுவதில்லை, ஆனால் நண்பர்கள் போன்று நடித்துக் கொண்டு துரோகச் செயல் செய்ய வாய்ப்பை எதிர் நோக்கி நிற்கும் பகைவர்களைக் கண்டு அஞ்சுக.

— திருவள்ளுவர் —

# இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் தோற்றதின் காரணம் யாது?

1857-ம் ஆண்டு சிலருக்கு - சில இந்தியருக்கு ரோசம் பிறந்தது. 'அடிமை வாழ்வு அவல வாழ்வு!' என்ற ஆத்திரம் பிறந்தது. ராணுவ வீரர்கள் சின முற்றார்கள்; சில அரசர்கள் வெகுண்டார்கள்; சில வீராங்கனைகள் சீறினார்கள். எல்லோரும் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்தார்கள். 'சிப்பாய்க் கலகம்' என்று வெள்ளைக்கார வரலாற்று ஆசிரியர்கள் அதை வருணிக்கிறார்கள்; அதை நாம் முதல் சுதந்திரப்போர் என்கிறோம். அந்தப்போர் தோல்வி கண்டது.

காரணம் என்ன?

வேறு என்ன காரணம் இருக்கமுடியும்? கலகக்காரர்களுக்கிடையில் ஒற்றுமை இல்லை; ஒன்றுபட்ட நோக்கம் இல்லை; எல்லோரும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார்கள்; ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்திற்காகப் போரில் கலந்துகொண்டார்கள்; ஒரு பகுதியில் இருப்போர் இன்னொரு பகுதியில் இருப்போரைக் கலப்பதுமில்லை; கேட்பதுமில்லை. எல்லோரும் ஒரே தளபதி அல்லது தலைவருக்கு அடங்கியவர்களும் இல்லை; ஒவ்வொரு பகுதியிலும் ஒரு தலைவர். போராடியவர்கள் ஒன்றுபட்டிருந்தால் அப்போதே ஆங்கிலேயர் ஓட்டம் பிடித்திருப்பார்கள்.

ஆனால், ஆங்கிலேயர்கள் இந்தியர்களிடையே உள்ள ஒற்றுமைக் குறைவை நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். முதல் விடுதலைப்போர் இவ்வாறு தோல்விகண்டது. 'ஆங்கிலேயர்கள் வல்லவர்கள்; அவர்களை வெல்லமுடியாது' என்ற சோர்வு மனப்பான்மை மக்களுக்கு ஏற்பட்டது. ஆனால் உண்மையாகப் பார்த்தால் ஆங்கிலேயர்க்ள் பக்கம் நின்று போராடியும் உயிரைப் பறிகொடுத்தும் வெற்றிதேடித் தந்தவர்கள் யார் என்கிறீர்கள் இந்தியரே; ஐயோ இந்தியரே

## பழமையில் புதுமை

நம்முடைய வரலாறு பண்டை வரலாறுநமது பெருமைக்குச் சான்று கூறுகிறது. இந்தப் பழமைப் பற்று, புதுமை முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டும். வெறும் பழங்கதை பேசுவதால் பயன் இல்லை. அந்தப்பழைய காலத்துப் பெருமையைத்'தமிழ்ஈழம்' மீண்டும் பெற வேண்டும். மீண்டும் இந்நாடு உலகிற்கு ஆசானாக விளங்க வேண்டும்.

— யாரோ —

# யுத்தமுனையில் நாம்

# இளைஞர் குரல்

## புயல் நிவாரண வேலைகள் சம்பந்தமாக இதுவே இளைஞர் பேரவையின் கருத்து! உணர்ந்து செயல்படும்படி மக்களுக்கு உருக்கமான அழைப்பு!

ஒரு யுத்த மொன்றின் போது எவ்வாறு விரைவாகவும் மக்களின் பூரண ஒத்துழைப்புடனும் செயல்படவேண்டுமோ அவ்வாறே கிழக்கு ஈழத்தின் துயர் துடைக்கத் துரிதமாக ஈடுபடவேண்டும். மக்களும் குறிப்பாக இளைஞர்களும் இதை உணர்ந்து செயல் படும் படி உருக்கமான வேண்டுகோள் ஒன்றைத் தமிழ் இளைஞர் பேரவை விடுத்துள்ளது.

இயற்கையின்பயங்கரத்தால் பெரும் அழிவுக்குட்பட்டிருக்கிறது கிழக்கு ஈழம். எமது சொந்தச் சகோதரர்கள் பட்டினியால் வாடுகிறார்கள் நோய் பரவும் ஆபத்துக்கள் தோன்றியுள்ளன உண்பதற்கு உணவோ, உறைவதற்கு உறைவிடமோ, உடுப்பதற்கு உடையோ இன்றித் துயருகின்றனர் அவர்கள். இந்நிலையில் நாம் உண்டு உடுத்து உறங்குவதா?

விடுதலைக்குப் போராடும் நாம் நம் கையே நமக்கு உதவி என உணரவேண்டும். எனவே உடனடியாக உணவு, உடை, மருந்துப்பொருட்கள் போன்றவற்றைச் சேகரித்து அனுப்பும்படி வேண்டப்படுகிறார்கள்.

அத்துடன் தொண்டர்களாகப் பணிபுரிய விரும்புபவர்கள் அவசரமாக யாழ் நகர் ஸ்ரான்லி வீதியில் உள்ள இளைஞர் பேரவைக் காரியாலயத்திற்கு அழைக்கப்படுகிறார்கள்.

— —

## மனித உரிமைகள் தினத்தைச் சிறீலங்கா அரசு கொண்டாடலாமா?

மனித உரிமைகள் திமை் 10-2-78 இல் கொண்டாடப்படுகிறது. இத் தினத்தை சிறீலங்கா அரசு கொண்டாடினால் தார்மீக பூமி தாங்குமா?

★ தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்களைக் குறிப்பாகவும் பொதுவாகத் தீவின் அனைத்துத் தமிழ்பேசும் மக்களையும் இனக்கொலை செய்யும் நடவடிக்கையாகவே புதிய அரசியல் சட்டத்தில் "பெற்றோர் விரும்பிய தேசிய மொழியில் போதனை" என்ற நச்சுச் சரத்துச் சேர்க்கப்பட்டுள்ளது.

★ தமிழ் மக்களின் மரபு வழித்தாயகத்தில் சிங்களவர்களைக் குடியேற்றத் திட்டம் தீட்டப்படுகிறது. ஒரு இனத்தினரை அவர்களைச் சிறுபான்மையினர் ஆக்கும் பொருட்டு அவர்தம் மரபுவழித் தாயகத்தில் வேறு இனத்தினரைக் குடியமர்த்துவதை ஐ. நா. இன ஒழிப்பு நடவடிக்கையென்றே கருதுகிறது.

★ தமிழ் இளைஞர்களைப் போதிய காரணமின்றிச் சிறையில் அடைக்கப் புதிய அடக்குமுறைச் சட்டங்களைப் போடுவது அரசின் இன்றய தந்திர சாதனைகள்.

★ திறமைக்கு முதல் இடமின்றி இன விகிதாசார முறைப்படி பல்கலைக்கழகத் தெரிவு இடம்பெறும் எனத் தனது தேர்தல் வாக்குறுதியையும் மீறி அரசு தார்மீகம் பேசுகிறது.

இந்நிலையில் மனித உரிமைகள் தினத்தை எவ்வாறு சிறீலங்கா அரசு கொண்டாட முடியும்?

— —

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### தேர்தல் ஒரு சாக்...

சத்தியாக்கிரகம் செய்தனர் இலங்கைத் தமிழர். இது உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள தொலைகாட்சிக் கருவிகள் மூலம் பார்த்தனர். பத்திரிகைகள் இலங்கையின் இன வேறுபாட்டை அம்பலப்படுத்தின. அண்மையில் ஐ. நா சபையில் வைகுந்தவாசன் சலசலப்பை ஏற்படுத்தி இலங்கை அரசை அதிர்ச்சிக்குள்ளாகினார்.

ஆனால் வெளிநாடுகள் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச மாநாடுகளில் நடத்தும் சம்பிரதாயப் பேச்சுக்கள் மட்டும் எமது பிரச்சனையை உலகிற்குச் சரியாக உணர்த்தாது.

கடந்த காலங்களில் பாராளுமன்றத் தேர்தல் தியாகராசா, அருளம்பலம், மார்ட்டின், துரையப்பா, ராஜன் செல்வநாயகம், கனகரத்தினம் போன்ற கொள்கைக்கோமான்களை ஆக்கித் தந்திருக்கிறது. தமிழ் ஈழம் ஒன்றையே அதன் விடுதலையையே முன்வைத்துப் பாராளுமன்றம் சென்றவர்கள் தமது சுய இலாபத்திற்காக இலட்சியத்தை மறந்து அபிவிருத்தி என்று கூப்பாடு போடுகிறார்கள்.

பாராளுமன்றத்தை மையமாக வைத்த ஒரு இயக்கம் எமக்கு விடுதலையைத் தேடித் தராது. பணம் படைத்தவர்கள் முதலாளி வர்க்கத்தினர் தேர்தல் மூலம் தலைவர்களாகிப் பின்னர் விடுதலைப் பாதையைத் திசை திருப்பி விடுகிறார்கள்.

விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தமட்டில் இயக்கத்தோடு பலகாலமாகத் தாடர்பற்றவர்கள் எம்பிக்கள் ஆகிப் பின்னர் இயக்கத்திற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள்.

தமிழினத்திடையே ஒற்றுமையைச் சிதைத்துப் பெரும் மோதலை ஏற்படுத்தும் இத் தேர்தலை இளைஞர் பேரவையினராகிய நாம் போதிய காரணங்களோடு நிராகரிக்கிறோம்.

எனவே தேர்தலை மையமாக வைத்த த. வி. கூட்டணியில் நாம் சாதாரண உறுப்பினர்களாக இருக்க முடியாதிருக்கிறது. தனித்துவத்தைப்பேணி கூட்டணியின் தலைமையை மதிக்கும் ஒரு விடுதலை இயக்கமாக இளைஞர் பேரவையைக் கட்டி எழுப்புவது எமது கடமையாகும்.

கூட்டணியில் தாபன ரீதியாக தமிழ் இளைஞர் பேரவை அங்கம் வகிக்கும். கூட்டணியின் விடுதலைக்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த துணை நிற்கும்.

இவ்வாறு நாம் செயல்படும் போது ஒற்றுமையைக் குலைக்கின்றோம் என்ற தவறான பிரசாரத்தை எம்மிலும் அதிக பிரசார வசதிகளைக் கொண்ட கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் செய்யாதிருக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த இளைஞர்கள் தம்மைச் சந்திக்கும் கூட்டணிப் பா. உக்களிடம் கூறுகிறார்கள்.

#### சில தலைவர்கள் வரவேற்பு

தமிழ் இளைஞர் பேரவையின் இந்த நிலைப்பாட்டைச் சில தமிழ்த் தலைவர்களும் வரவேற்றுள்ளனர். இது பற்றி ஒரு கூட்டணி எம். பி கூறுகையில் "கூட்டணி எம்பிக்களுக்குப் பல கடமையுண்டு" தொகுதி அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி மாவட்ட அபிவிருத்தி போன்ற துறைகளில் நேரத்தைச் செலவழிக்க வேண்டியுள்ளது. இவர்களை அமைப்பாளர்களாகக் கொண்ட விடுதலைக் கூட்டணி அமைப்புகளும் - கிளைகளும் விடுதலையை மறந்து செயல்பட வேண்டியுள்ளது. எனவே தனிய விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தேர்தலை நிராகரித்த இயக்கம் அவசியமாகிறது. அவ்வியக்கம் கூட்டணியின் நிலைமையையும் விளங்கிக்கொண்டு ஒரு தெளிவின் அடிப்படையில் செயல்பட வேண்டும்" என்றார்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### புயல் நிவாரண...

ஈடுபட்டுள்ளனர். யாழ் நகர் ஸ்ரான்லி வீதியில் உள்ள இளைஞர் பேரவைக் காரியாலயம் இரவு பகலாகத் திறந்து வைக்கப்பட்டு முழு நேரமாக பத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் நிவாரண வேலைகளை ஒருமுகப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

28-11-78 அன்று மீண்டும் ஒரு லொறியில் உணவுப் பொருட்கள், உடைகள் மற்றும் அன்றாட அத்தியாவசிய பாவனைப் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மீண்டும் 4-12-78 இல் த. இ. பே. மட்டுநகர் அமைப்பாளரின் வேண்டுகோளின்படி 52 தொண்டர்களுடனும் உணவுப் பொருட்களுடனும் பஸ் வண்டி மூலம் மட்டுநகர் சென்றுள்ளனர். மட்டுநகரில் அரசடி மகா வித்தியாலயத்தில் தொண்டர்களின் தலைமை முகாமை அமைத்துள்ளார்கள். மேலும் நான்கு முகாம்கள் பட்டிருப்பு, கற்குடா மற்றும் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தொண்டர்கள் பிரதான வீதிகளைச் சீரமைத்துள்ளார்கள். தற்போது மட்டுநகர் வைத்தியசாலை சீரமைப்பு முடிவடையும் தறுவாயில் உள்ளது.

தமிழ் இளைஞர் பேரவைத் தொண்டர்களின் சேவைக்கு மட்டுநகர் அரசாங்க அதிபர் உட்பட அரசாங்க அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு வணசிங்கா, திரு கே.சி. நித்தியானந்தா, ஏழூர் ஆலாலசுந்தரம் போன்றவர்கள் ஆலோசனைகளையும், ஆதரவையும் வழங்கி வருகின்றனர். தொண்டர்களாக பவர் பெயர் பதிவு செய்துள்ள போதும் தேவைக்கேற்ப தகுதி கணிக்கப்பட்டு காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படவுள்ளனர். தமிழ் இளைஞர் பேரவை தொண்டர் குழு அரசாங்க அதிபரால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் குழுவாக மட்டுநகரில் செயல்படுகிறது குறிப்பிடத்தக்கது.

## ஒரு கடிதம்

### திருகோணமலை கித்துள் ஊற்றுக் குடியேற்றம்

ஆசிரியர்,
இளைஞர் குரல்

ந. சண்முகநாதன்,
கனகராயன்குளம்

ஐயா,

தங்கள் 1-11-78 பத்திரிகையில் சில பகுதிகளைப்பார்த்து மிகவும் வேதனைப்படுகின்றேன்.

1978 ல் எமது இயக்கத்தின் உதவியுடன் திருகோணமலை கித்துள் ஊற்றில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டத்தின் இன்றைய நிலை என்ன? இன்றைய நிலை மூத்த தெய்யோ நாண்டக் கியா.

1968 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக் குடியேற்றத்தில் கட்டப்பட்ட வீடுகள் 12ம் அரசாங்கத்தால் உத்தரவிடப்பட்டு, உதவி அரசாங்க அதிபர், கிராம சேவையாளர்களினால் நெருப்பு வைக்கப்பட்டது. இதற்காக சில இளைஞர்களின் முயற்சியால் ஏ. சி. கனகசிங்கம், வழக்குரைஞரின் உதவியுடன் திருகோணமலை மாவட்ட நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அரசாங்க அதிபர் தமது சிங்கள உதவி அரசாங்க அதிபரையும் கிராமசேவையாளரையும் காப்பாற்றுவதற்காக திரு. அ: அமிர்தலிங்கம் அவர்களுடன் அப்போதைய அரசாங்க அதிபர் திரு. சிவஞானம் மூலம் தொடர்பு கொண்டு 12 தமிழர்களுக்குக் காணி கொடுக்கப்பட்டது. ஆனால் 6 பேர் மாத்திரமே குடியேறினார்கள். கடந்த ஆகஸ்ட் கலவரத்தின் பின், அங்கு திரு. பொன்னையா என்பவரைத் தவிர வேறு யாரும் இல்லை. கலவரலின்போது பிள்ளையார் கிணற்றில் போட்டுவிட்டு சுவரின் மூத்த தெய்யோ நாண்ட கியா என்று எழுதப்பட்டுள்ளது. பிள்ளையார் கோவிலுக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட இரண்டு ஏக்கர் காணிக்குள் இன்றுசிங்களக் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடம் இருக்கிறது.

ந. சண்முகநாதன்

### இளைஞர் குரல்

சென்ற இதழ் வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்றுவிட்டது. சுதந்திர தாகம் கொண்டோர் எல்லாருக்கும் பிரதிகள் அனுப்பமுடியாமைக்கு வருந்துகிறோம். ஏனெனில் பிரசுரிக்கும் செலவு அபாரமானபடியால் குறிப்பிட்ட பிரதிகளே அச்சிடப்பட்டன. இந்த மாதம் பிரதிகளை அதிகரித்துள்ளோம்.

'இளைஞர் குரல்' இலாபத்துக்காக நடத்துப்படும் பத்திரிகையல்ல. சுதந்திரப்பணியே அதன் இலட்சியம்.

சந்தா விபரம்

ஓர் ஆண்டு — 10 ரூபா
அரை ஆண்டு — 5 ரூபா
(தபால் செலவு உட்பட)

புதிய ஆண்டு தொடங்குவதால் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளுங்கள்.

எமது மூகவரி:- 'இளைஞர் குரல்'
பாலன் வளவு
தெல்லிப்பளை

### இருட்டடிப்பு

ஆனால் இளைஞர் பேரவையின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் பத்திரிகைகளில் ஏதோ ஒரு சக்தியால் இருட்டடிப்பும் திரிப்பும் செய்யப்படுகின்றன என்பதை அவ்வப் பகுதி மக்கள் இப்போ நன்கு அறிந்துள்ளனர்.

இப்பத்திரிகை தெல்லிப்பழையில் வசிக்கும் திரு. சொ. யோகநாதன் அவர்களால் யாழ்ப்பாணம், 432, காங்கேசன் துறை வீதியில் இருக்கும் செட்டியார் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 8 - 12 - 78 அன்று வெளியிடப்பட்டது.